# பர்னபா - தாராளமாகக் கொடுப்பவன்

## நாம் நேசிக்கும் இயேசுவானவர் தாராளமாகக் கொடுக்கும்படி நமக்குக் கட்டளை இட்டார்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் G1b யை வாசிக்கவும்.

ஜெபம் : பரலோகத் தந்தையே! நீர் எங்களுக்கு உமது குமாரனாகிய இயேசுவையும் நித்திய வாழ்வையும் கொடுத்தீர். சந்தோஷமாக அனுபவிக்க நல்ல விஷயங்களைத் தந்தீர். தேவையில் இருப்பவர்களுக்கு நானும் எனது சபையாரும் நீர் கொடுத்த நல்ல ஈவுகளை பகிர்ந்து கொள்ள உதவுவீராக.

1. **தாராளமாய்க் கொடுக்க உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்தி உங்கள் மந்தையும் அவ்வாறே செய்ய போதிக்கவும்**

**பர்னபாவும் ஆதி கிறிஸ்தவர்களும் தாராளமாய்க் கொடுத்தனர்.**

- **அப். 2:44-45 :** தேவைகளை சந்திக்க ஆதி விசுவாசிகள் எவ்வாறு கொடுத்தனர்?

  (a) எந்த விசுவாசிகள் கொடுத்தனர்?

  (b) யாருக்கு அவர்கள் கொடுத்தனர்?

  *(பதில்கள்: a) கொடுப்பதற்கு ஏதாவது இருந்த யாவரும் b) தேவையில் இருந்த யாவருக்கும்.)*

- **அப். 4:32-37:** தேவையில் இருந்த விசுவாசிகளுக்கு எவ்வாறு பர்னபா கொடுத்தான்?

  a) விற்பதற்காக அவன் எதைக் கொடுத்தான்?

  b) யாரிடம் கொடுத்தான்?

  *(பதில்கள்: a) நிலம் b) தேவையில் இருப்போருக்கு பகிர்ந்து கொடுக்க - அப்போஸ்தலர்களிடம்)*

- **அப். 11:28-30 :** தேவையில் இருப்போருக்கு சபை எவ்வாறு உதவ வேண்டும்?

  a) விசுவாசிகள் எவ்வளவு கொடுத்தனர்?

  b) யாருக்குக் கொடுத்தனர்?

  *(பதில்கள் : a) அவர்களுக்குக் கொடுக்க முடிந்ததை b) எருசலேமில் இருந்த ஏழை விசுவாசிகளுக்கு)*

**கொடுப்பவர்களுக்கு தேவன் தரும் வாக்குத்தத்தம்:**

- **நீதி 19:17 ல் காண்க:**

  a) யாருக்கு நாம் கொடுக்க வேண்டும்?

  b) தேவ வாக்குத்தத்தம் என்ன?

  *(பதில்கள் : a) ஏழைகளுக்கு b) நாம் கொடுப்பதை கர்த்தர் திருப்பித் தருவார்)*

- **லூக் 6:30-38 ல் காண்க:**

  a) நாம் யாருக்குக் கொடுக்க வேண்டும்?

  b) தேவ வாக்குத்தத்தம் என்ன?

  *(பதில்கள்: a) நம்மிடம் கேட்கும் யாவருக்கும் b) அதே அளவில் நமக்குத் திருப்பித் தரப்படும்)*

- 2 கொரி 9:1-11 ல் காண்க:

  a) யாருக்கு நாம் கொடுக்க வேண்டும்?

  b) எவ்வளவு கொடுக்க வேண்டும்?

  c) தேவ வாக்குத்தத்தம் என்ன?

  d) கொடுப்பது குறித்து நாம் எவ்வாறு உணர வேண்டும்?

  *பதில்கள்:*

  *a) ஏழை கிறிஸ்தவர்களுக்கு.*

  *b) நாம் நம் இருதயத்தில் நிர்ணயம் செய்வது.*

  *c) கொடுப்பதற்கு போதுமானது எப்போதும் நம்மிடம் இருக்கும்.*

  *d) மகிழ்ச்சி.*

- பிலிப்பியர் 4:13-19:

  a) யாருக்கு நாம் கொடுக்க வேண்டும்?

  b) தேவ வாக்குத்தத்தம் என்ன?

  *பதில்கள்:*

  *a) புதிய சபைகளை ஆரம்பிக்கும் அப்போஸ்தலர்களுக்கு.*

  *b) நமக்கு தேவையானவற்றை தேவன் அருளுவார்.*

- மத். 6:19-21 ல், நாம் நமது பொக்கிஷத்தை எங்கு சேர்த்து வைக்க வேண்டும் என்பதைக் காண்க.
- மத். 6:31-33 ல், முதலில் நாம் தேட வேண்டியதைக் காண்க.



## 2. வரும் வாரத்தில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

- உங்கள் மந்தையில் உள்ள உறுப்பினர்களின் தேவைகளையும், யாருக்கு விசுவாசிகள் கொடுக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்க.
- தேவையில் இருப்போர்களை சந்தித்து விசுவாசிகளின் பரிசுகளைத் தரவும். முதலில் சபையில் இருக்கும் தேவையில் உள்ள மக்களிடம் தொடங்கி பின் வெளியில் இருப்பவர்களுக்கும் சேவை செய்யவும், கலா. 6:10.

- பொருள்களின் வரவையும், செலவையும் கணக்கு எழுதுக.
- தேவையில் உள்ளவர்களை கவனிக்க ஆண்-பெண் மூப்பர்களை நியமிக்கவும், அப். 6:1-6.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

தேவையில் உள்ளவர்களுக்கு பர்னபா எவ்வாறு கொடுத்தான் என்பதைக் கூறுக அல்லது நடித்துக் காட்டுக, அப். 4:32-37.

மன்னிக்கப்பட்ட ஒரு பெண் இயேசுவினிடத்தில் எவ்வாறு அன்பு காட்டினாள் என்பதைக் கூறவும் அல்லது நடித்துக் காட்டவும், **லூக் 7:36-50.**

ஒரு ஏழை விதவை தன்னிடமிருந்த வாழ்க்கைக்குரிய எல்லாமான கடைசி நாணயத்தையும் தேவனுக்குக் கொடுத்ததைக் கூறவும் அல்லது நடித்துக் காட்டவும், **மாற்கு 12:38-44.** அல்லது இந்தக் கதையை **சிறுவர்களைக்** கொண்டு நடிக்க வைத்து அவர்கள் தயாரித்த கேள்வியைப் பெரியவர்களிடம் கேட்கவும்.

நீதி 19:17 ஐ **மனனம் செய்க.**

ஏதாவது மிக அவசரமான தேவை இருந்தால் அதற்கென்று **பணம் பிரிக்கவும்.**

தேவன் நமக்குத் தந்த பெரிய பரிசைப் பற்றிய **வேதாகம** வசனங்களான யோவான் 3:16-17, யோவான் 6:47-51, 1 யோவான் 3:16-17, ரோமர் 6:23 ஆகியவற்றை வாசிக்க அல்லது ஒப்புவிக்கும்படி விசுவாசிகளை ஆயத்தப்படுத்தவும்.

2 நாளா. 35:17-19 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். நாம் பஸ்காவை ஆசரிப்பதையும் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகுப் பதிலாக தேவன் தமது பரிசான, தேவ ஆட்டுக்குட்டி இயேசுவை அளித்ததை விவரித்துச் சொல்லவும்.

### கொடுத்தல் - பெற்றுக்கொள்ளல் பற்றி ஊக்கமளிக்கும் வேதவசனங்கள்

| | |
|---|---|
| 1 நாளா. 29:9-13 | லூக் 7:36-50; 14:12-14 |
| 1 கொரி. 16:1-4 | மத். 6:19-21; 6:31-33; 19:28-30; 25:34-35 |
| 1 யோவான் 3:16-19 | பிலி. 4:13-19 |
| 1 தீமோ 5:3-5 | நீதி 11:24-28; 19:17; 21:13; 22:9; 28:27 |
| 2 கொரி 9:7-8 | சங். 39:4-7 |
| அப் 11:28-30; 20:32-35 | ரோமர் 10:13-15; 15:20-25 |
| யாக்கோபு 2:14-16 | உபா. 8:15-19; 15:7-11 |

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net